# க்ரோமா (Groma)

**வசிப்பிடம்:** க்ரோமா மொழி பேசும் 12,840 மக்கள் தென் திபெத்தில் சிக்கிம்-பூட்டான் எல்லையில் உள்ள சும்பி (Chumbi) பள்ளத்தாக்கில் வசிக்கின்றனர் எனக் கி.பி.1993 ல் செய்யப்பட்ட ஒரு பதிவை எத்னோலாக் (Ethnologue) மேற்கோளாகக் காட்டுகிறது. இந்தப் பள்ளத்தாக்கு ஷிகாசே (Xigaze) மாகாணத்தின் சுமு (Chomo) எனப்படும் யாதோங் (Yadong) மாவட்டத்தில் உள்ளது. பிரெஞ்சு கத்தோலிக்க மிஷனெரி மெஷியர் டெஸ்கோடின்ஸ் (Monsieur L'Abbé Desgondins) திபெத்தை இவ்வாறு விவரிக்கிறார் "ஒரு காகிதத் தாளை எடுத்து அதைக் கசக்கி கீழே விழவிடுங்கள்; காகிதத்தின் எப்பகுதியும் தட்டையாக இராது-தெரிவதெல்லாம் ஊசி முனைகளும் பள்ளங்களும் மட்டுமே - செங்குத்தான கரடுமுரடான சென்றடைய முடியாத மலைகளும் பள்ளத்தாக்குகளும் மட்டுமே." குறிப்பிடப்படாத எண்ணிக்கையுடைய க்ரோமா மக்கள் எல்லையின் அப்புறத்தில் இந்தியாவில் வசிக்கின்றனர். இந்தியாவில் இவர்களைத் திபெத்தியர்கள் என்ற பெயரால் மட்டுமே வகைப்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிகிறது, அதிகாரப்பூர்வமான அரசாங்கப் பட்டியலில் இவர்கள் இடம்பெறுவதில்லை.




**அடையாளம்:** க்ரோமா மக்களைப்பற்றி அறியப்பட்டிருக்கிற காரியங்களில் அநேகம் கி.பி. 1905 ல் செய்யப்பட்ட மொழியாராய்ச்சியின் மூலமாகவே தெரியவந்தது. க்ரோமா மக்கள் சீனாவில் அதிகாரப்பூர்வமாகத் திபெத்தியர்கள் என அறியப்படுகிறார்கள் கூடவே கலாச்சாரத்திலும் இனத்திலும் இவர்கள் திபெத்தியர்களிடத்திலிருந்து வேறுபடாதவர்கள்.

**மொழி:** இவர்கள் வேறுபடுவது மொழியில் மட்டும்தான். க்ரோமா மொழி தென் திபெத்திய மொழியின் கிளையாகும். இதில் மேல் மற்றும் கீழ் க்ரோமா என இரு வட்டார மொழி வழக்குகள் உள்ளன. மேலும் இரண்டு வட்டார மொழி வழக்குகள் ஸ்பிதி (Spiti) மற்றும் தொமொ (Tomo) இம்மொழியோடு தொடர்புடையதாக இருக்கக்கூடும் எனக் கருதப்படுகிறது.

**வரலாறு:** திபெத்திய நாகரீகத்தின் மூலைக்கல் லாசாவிலிருந்து தென்கிழக்காக 80 கிலோமீட்டர் தொலைவிலுள்ள யர்லுங் (Yarlung) பள்ளத்தாக்காகும். இங்கே இவர்களுடைய பாரம்பரியத்தின்படி ஒரு குரங்கு மற்றும் பெண் பிசாசுக்கு இடையே உண்டான சம்பந்தம் திபெத்திய இனத்தை உண்டாக்கியது. சுமார் ஆறாம் நூற்றாண்டில் ராஜா நம்ரி கம்பொ (Namri Gampo) திபெத்தின் குலங்களை இணைக்கத் தொடங்கினர். இருந்தும் இவருடைய குமாரன் சொங்ஸ்சென் கம்பொ (Songtsen Gampo) மூலமாகவே ராஜ்யம் ஒருமைப்படுத்தப்பட்டு ஓர் இராணுவ சக்தியாக நிலைநாட்டப்பட்டது. சிக்கிம் எப்பொழுதும் இந்திய ஆதிக்கத்துக்குள் பெயரளவு சுதந்திரத்தோடு இருந்தது. பின் கி.பி.1975ல் இந்தியாவோடு இணைக்கப்பட்டது. திபெத்தியர்கள் 10 ஆம் நூற்றாண்டிலிருந்தே சிக்கிமுக்குள் குடி பெயர்ந்தனர், நேபாளிகள் 19 ஆம் நூற்றாண்டுவரை சிக்கிமுக்குள் வரவில்லை இருந்தும் இன்று சிக்கிமின் ஜனத்தொகையில் 75% நேபாளிகளாவார்கள்.

**பழக்கவழக்கங்கள்:** க்ரோமா மக்கள் வழக்கமான திபெத்திய வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்கள் யாக், செம்மறியாடு மற்றும் ஆடு வளர்க்கின்றனர். க்ரோமா பெண்களே பெரும்பாலான வேலைகளைச் செய்கின்றனர், ஆண்கள் பெரும்பாலான நேரத்தை நண்பர்களோடு சூதாடுவதிலும் குடிப்பதிலும் செலவிடுகின்றனர்.

**மதம்:** திபெத்திய தந்திரயான புத்தமதம் இவர்கள் மத்தியில் ஆதிக்கம் செய்கிறது. பக்தர்கள் தீர்த்த யாத்திரையாகக் கைலாஷ் போன்ற புண்ணியஸ்தலங்களுக்குச் செல்கின்றனர். ஆவிகளின் சினம் தணிக்க ஆன்மவாதம் சார்பான அநேகச் சடங்குகளையும் செய்கின்றனர்.

**கிறிஸ்துவம்:** அறியப்பட்ட நிலையில் கிறிஸ்தவர்கள் யாரும் க்ரோமா மக்கள் மத்தியில் கிடையாது. இவர்கள் மத்தியில் செய்யப்பட்ட சிறியளவிலான மிஷன் பணியும் கடினமான அடக்குமுறையைச் சந்தித்தது. "ஷாமன்(Shaman) பூசாரிகளால் கருணையின்றிப் பச்சை யாக் தோலுக்குள் வைத்துத் தைத்து, சுருங்குகிற தோலால் எலும்புகள் நொறுக்கப்பட்டு உயிர் போகும்படி கொளுத்துகிற வெயிலில் வைத்துக் கொல்லப்பட்ட கிறிஸ்தவனை இரட்சிக்கப்பட்டவர்கள் எளிதாக மறக்க முடியவில்லை." கி.பி.1997 ல் அருகாமையிலுள்ள சிக்கிமில் 250 சபைகள் எண்ணப்பட்டன ஆனால் கொஞ்சங்குறைய எல்லா விசுவாசிகளுமே நேபாளிகளாவார்கள். க்ரோமா மக்கள் வாழும் வட மாவட்டம் தொடப்படவில்லை.




**Population:**
14,920 (2000)
18,390 (2010)
22,650 (2020)
**Countries:** China, India
**Buddhism:** Tibetan
**Christians:** none known

## மேலோட்டம்:

**மற்ற பெயர்கள்:** Trowoma, Chomo Tibetan, Chomo, Gromo, Tomo, Zhuomu, Chuomu Tibetan, Chumbi Tibetan

**மக்கள்தொகை:** 12,840 in China (B Grimes [1993 figure])

**மொழிப்பிரிவு:** சீன-திபெத்திய, திபெத்திய-பர்மிய, ஹிமாலய, திபெத்திய-கனௌரி, திபெத்திய, தென் திபெத்திய மொழி

**மொழி வழக்குகள்:** 4 (Upper Groma, Lower Groma, Spiti, Tomo)

**திபெத்திய புத்தமதம்:** 100%

**கிறிஸ்துவம்:** 0%

**வேதாகமம்:** இல்லை

**இயேசு திரைப்படம்:** இல்லை

**சுவிசேஷ ஒலிப்பதிவுகள்:** இல்லை

**கிறிஸ்தவ அலைபரப்புகள்:** இல்லை

ROPAL **குறியீடு** : GRO

**கிறிஸ்துவத்தின் நிலை**




- சுவிசேஷத்தைக் கேட்டிராதவர்கள்
- சுவிசேஷத்தைக் கேட்டும் இரட்சிக்கப்படாதவர்கள்
- ஏதாவது ஒரு கிறிஸ்துவப் பிரிவைப் பின்பற்றுபவர்கள்